**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.76/2021**

**2025 ஆம்** வருடம் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயக்குமார் | ஜாதி | : | |
| த.பெ | : | ராமையா | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 45/2025 |
| தேதி | : | 12.08.2025 | | | |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

இந்த வழக்கில் சொத்துக்கள் சம்மந்தமாக மட்டும் தான் பரிகாரம் கேட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல, கோவில் சொத்துக்கள் சம்மந்தமாக பரிகாரம் கேட்டுள்ளேன். கோவில் சம்மந்தமாக என்ன பரிகாரம் கேட்டுள்ளீர்கள் என்றால் நிர்வாகம் மற்றும் வரவு, செலவு பற்றி பரிகாரம் கேட்டுள்ளேன். உங்களுடைய வழக்குரையிலும், அதன் சொத்து விபரத்திலும் கோவில் நிர்வாகம் தொடர்பாக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு தற்பொழுது வாதி, பிரதிவாதி பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.5/2004 வழக்கில் ஏற்பட்ட சமாதான தீர்ப்பில் உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

மேற்சொன்ன சமாதான தீர்ப்பில் சொத்துக்களை நான்கு பேரும் கூட்டாக நிர்வாகம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சமாதான தீர்ப்பில் சுழற்ச்சி முறையில் சொத்தின் நிர்வாகத்தை பார்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அந்த சமாதான தீர்ப்பிற்கு முரணாக நீங்கள் நான்கு பேருமே மீண்டும் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரமுடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து நிர்வாகம் சம்மந்தமாக 2020-2021 ஆண்டுகளில் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் வரவு, செலவு பார்த்து அதில் வாதி, பிரதிவாதி நான்கு பேரும் கையொப்பம் செய்தீர்கள் என்றால் கையொப்பம் செய்தேன், வரவு, செலவு பார்க்கவில்லை.

2019 ல் நீங்கள் நிர்வாகம் பார்க்கும்போது ரூ.2,00,000/- சொத்தின் நிர்வாகத்திற்காக வெளி நபர்களிடம் நீங்கள் கடன் வாங்கியிருந்தீர்கள் என்றும், அந்த கடனை 2020-2021 ஆண்டுகளில் திரும்ப செலுத்தி வரவு, செலவு கணக்கில் காட்டப்பட்டுள்ளது என்றால் நான் நிர்வாகம் பார்க்கவில்லை, ரூ.2,00,000/- த்தை கடன் வாங்கியிருப்பார்கள், நான் வரவு, செலவு பார்க்கவில்லை. 2020-2021 வரவு, செலவு கணக்கில் நீங்கள் வாங்கிய கடன் என்று உங்களிடம் காட்டப்படும் வரவு, செலவு கணக்கில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கையொப்பம் மட்டும் செய்தேன், வேறு எதுவும் எனக்கு தெரியாது.

2018-2019 ஆண்டுகளில் நீங்கள் தான் வரவு, செலவு பார்த்தீர்கள் என்றும், அப்போது தான் ரூ.2,00,000/- கடன் பெற்றீர்கள் என்றும், தற்பொழுது வழக்கிற்கான நீங்கள் பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 2018-2019 ஆண்டிற்கான வரவு, செலவு கணக்குகளை ஊர் பொதுமக்கள் முன்பு ஒப்படைக்கவில்லை என்றால் நான் வரவு, செலவு கணக்கே பார்க்கவில்லை. 2017-2018 ல் வாதி, பிரதிவாதிகள் ஆகிய நான்கு பேரும் வரவு, செலவு பார்த்துக்கொண்டிருந்தபோது கடைக்கான கட்டிடங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளது என்றால் 2014-2015 ஆண்டுகளில் மேற்சொன்ன கட்டிடம் கட்டப்பட்டது. நாங்கள் நான்கு பேரும் நிர்வாகம் மட்டுமே செய்தோம், அதில் பிரதிவாதி மட்டும் தான் வரவு, செலவு கணக்கை பார்த்தார்.

பிரதிவாதி கார்த்திகேயன் 2014-2015 ல் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தனது சொந்த பணத்தை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமான அமைதி பேச்சுவார்த்தைக்கான ஆவணத்தில் உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்தில் கார்த்திகேயனுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டு தான் கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான், வரவு, செலவு கணக்கு கொடுத்தால் தான் எனக்கு அது பற்றி தெரியும். 2020-2021 ஆம் ஆண்டுகளில் இருந்தும், அதற்கு பின்னிட்டும் நாளது தேதிவரை நீங்கள் நான்கு பேரும் தான் நிர்வாகத்தை பார்த்துக்கொண்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல, திருவிழாவில் மட்டும் கலந்து கொள்வோம். நிர்வாகத்தில் கலந்துகொள்ளவில்லை. நிர்வாகம் பார்த்து வரவு, செலவு கணக்கில் 2020-2021, 2021-2022 ஆகிய ஆண்டுகளில் நீங்கள் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் 2022 ல் நான் நிர்வாகம் பார்க்கவில்லை, அதற்கு முன்பு நான் கையொப்பம் மட்டும் தான் செய்தேன், வரவு, செலவு பார்க்கவில்லை.

உங்களை தவிர மற்ற வாதிகள் வரவு, செலவு கணக்கு 2020 க்கு பிறகு பார்த்து வருகிறார்கள் என்றும், அவர்கள் ஒத்துக்கொண்டு கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மற்ற வாதிகளை உங்களது தரப்பு சாட்சியமாக விசாரிக்கிறீர்களா என்றால் தேவையில்லை. மற்ற வாதிகள் இன்றும் வரவு, செலவு கணக்கு பார்த்து வருவதால் தான் நீங்கள் அவர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டு நீங்கள் வரவு, செலவு ஒப்படைக்காததால் அதன் பின்பு ஊர் பொதுமக்கள் கூட்டத்தில் முடிவு செய்து, OS.5/2004 சமாதான தீர்ப்பின் படி நீங்கள் நான்கு பேரும் சேர்ந்து தான் நிர்வாகம் பார்த்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல.

நான்கு பேரும் சேர்ந்து நிர்வாகம் பார்ப்பதால் 1, 3 வாதிகளுக்கு இந்த வழக்கை நடத்துவதற்கு விருப்பமில்லை என்றும், அவர்களது விருப்பத்திற்கு மாறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சமாதான தீர்ப்பிற்கு விரோதமாக வா.சா.ஆ.2 ஆவணமான அமைதி பேச்சுவார்த்தை தீர்மானம் உள்ளது என்றால் வரவு, செலவு குழப்பம்

ஏற்பட்டதால் சமாதானம் தீர்மானம் நடந்தது. வா.சா.ஆ.2 ஆவணப்படி நடந்த சமாதான தீர்மானம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரிதான், பிரதிவாதி வரவு, செலவு கணக்கு கொடுக்காததால் நடைமுறைக்கு வரவில்லை. நீங்கள் சொல்வது பொய் என்றும், நான்கு பேரும் சேர்ந்து தான் நிர்வாகம் பார்த்து வரவு, செலவு பார்த்து வருகிறீர்கள் என்றால் வரவு செலவு பார்க்கவில்லை. நிர்வாகத்தில் 2021 வரை பார்த்தேன். வா.சா.ஆ.1 சமாதான தீர்ப்பிற்கு விரோதமாக இந்த வழக்கில் நீங்கள் பரிகாரம் கோருவதால் உங்களுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 சமாதான தீர்மானம் தற்காலிகமாக தீர்மானம் என்றும், அதற்கு எந்த வித சட்ட வலிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் நிர்வாகத்தை நான்கு பேரும் சேர்ந்து பார்த்து வருவதால் இந்த வழக்கு அவசியமற்றது என்றால் சரியல்ல. 2020 க்கு பிறகு பிரதிவாதி தான் வரவு, செலவு கணக்கை பார்த்து வருகிறார் என்பதை நிரூபிப்பதற்கு ஊர் பொதுமக்கள் யாரையும் நீங்கள் விசாரிக்க தயாராக உள்ளீர்கள் என்றால் தயாராக உள்ளேன். 2018-2019 ஆம் ஆண்டுகளில் மேற்சொன்ன தாவா சொத்து கடைகளில் இரண்டு கடையை நீங்கள் வாடகைக்கு எடுத்தீர்களளா என்றால் எடுத்தேன். வாடகைக்கு எடுத்ததற்கான ஏலத்தொகை மற்றும் வாடகை தொகைகளை நீங்கள் செலுத்தவில்லை என்றால் செலுத்திவிட்டேன். அதற்கான ஆவணங்கள் எதையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நிர்வாகத்தில் இருந்து ரசீது எதுவும் தரமாட்டார்கள். நீங்கள் வாடகை எடுத்ததற்கான ஏலத்தொகை மற்றும் வாடகையை செலுத்தாமல், செலுத்திவிட்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor